Q.C - 084

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Survey Department Test – Draughtsman Test – Paper – I (Without Books) | 003 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. In survey, selection station selected should be visible from atleast __________ more
நில அளவை பணியில் குறைந்தது எத்தனை நிலையங்கள் தெளிவாக தெரிய வேண்டும்

(A) 3
(B) 2
(C) 5
(D) 1

2. Under which G.O. updating Registry Scheme was commenced
நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் எந்த அரசாணையின் படி மேற்கொள்ளப்பட்டது

(A) G.O.M.S.No.525
(B) G.O.M.S.No.1177
(C) G.O.M.S.No.300
(D) G.O.M.S.No.557

3. CORS Means
CORS என்பதன் விரிவாக்கம்

(A) Continuously Operating Reference System
(B) Continuously Operatable Revenue System
(C) Continuously Operatable Revenue Station
(D) Continuously Operating Reference Station

4. The software used for preparation of FMS
புலப்படம் வரைவு செய்ய பயன்படுத்தப்படும் மென்பொருள்

(A) TamilNilam
தமிழ்நிலம்
(B) Autocad
ஆட்டோகேட்
(C) Collabland
கோலாப்லேண்ட்
(D) CoralDraw
கோரல்ட்ரா

5. Which survey called Revenue Survey
வருவாய்துறை நில அளவை என்பது

(A) Cadastral Survey
கடாஸ்ட்ரல் நில அளவை
(B) Chain Survey
சங்கிலி நில அளவை
(C) Topographical Survey
ஸ்தல நில அளவை
(D) Supplemental Survey
துணை நில அளவை

6. Check the positions of old traverse stones and refix, if necessary using the __________ Facility of Total Stations.
பழைய டிராவர்ஸ் கற்களை ஆய்வு மற்றும் மாற்றுதல் ஆகியன டோட்டல் ஸ்டேசன் மூலமாக ———————— ல் அமைக்கப்படுகின்றன

(A) Shifting
மாற்றுதல்

(B) Stake out
வெளியேற்றுதல்

(C) Measuring
அளவுகளால்

(D) Scanning
பதிதல்

7. The square root of 21316
21316ன் வர்க்க மூலம்

(A) 146

(B) 166

(C) 156

(D) 176

8. In the front page of the 'A' Register __________ details will be furnished
'அ' பதிவேட்டில் முன்பக்கத்தில் ———————— குறிப்புகள் பதியப்பட்டிருக்கும்

(A) Descriptive Memoir
வரலாற்று குறிப்பு

(B) Survey Field Details
புல எண்கள் விபரங்கள்

(C) Land Owner Details
பட்டாதாரர் பெயர்

(D) Classifications
வகைப்பாடுகள்

9. In Land complaint __________ Will determined the boundary
நிலஎல்லை தாவா குறித்து ———————— முடிவெடுப்பர்

(A) Deputy Inspector of Survey
துணை அளவை ஆய்வாளர்

(B) Inspector
ஆய்வாளர்

(C) Village Officer
கிராம அலுவலர்

(D) Tahsildar
தாசில்தார்

10. Notice to the registered holders will be given on
நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பு ———————— ஆகும்

(A) Section 5
பிரிவு 5

(B) Section 9(2)
பிரிவு 9(2)

(C) Section 10
பிரிவு 10

(D) Section 13(1)
பிரிவு 13(1)

11. Traingles in chain surveying should not have any angle less than
சங்கிலி நில அளவையில் உள்ள முக்கோணங்களில் எந்தவொரு கோணமும் ———————— குறைவானதாக இருக்கும்

(A) 30° (B) 60°

(C) 90° (D) 180°

12. In 20 meter chain at the end of each 10th meter a __________ is fixed.
ஒரு 20 மீ சங்கிலியில் ஒவ்வொரு 10மீ–ல் ———————— பொருத்தப்பட்டது

(A) Needle
ஊசி

(B) Cross Staff
குத்துக் கட்டை

(C) Tally
தாலி

(D) Prong
ப்ராங்

13. 1 Hecter is __________ Acres
1 ஹெக்டர் என்பது ———————— ஏக்கர் ஆகும்

(A) 2.47 (B) 3.47

(C) 2.37 (D) 3.37

14. The First Survey Started on
நில அளவை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட நாள்

(A) 10th April 1802
10th ஏப்ரல் 1802

(B) 10th April 1803
10th ஏப்ரல் 1803

(C) 10th April 1804
10th ஏப்ரல் 1804

(D) 10th April 1805
10th ஏப்ரல் 1805

15. Length of metric chain commonly used in survey is
நில அளவையின் போது பொதுவாக பயன்படுத்தப்படும் சங்கிலியின் நீளம்

(A) 10 m
10 மீ

(B) 15 m
15 மீ

(C) 20 m
20 மீ

(D) 25 m
25 மீ

16. The ___________ and ___________ from the main circuit field book will be copied into rough traverse sheet
பெருஞ்சுற்று டிராவர்ஸில் ——————— மற்றும் ——————— ஆகியன தோராய டிராவர்ஸில் குறிக்கப்படுகிறது

(A) Angles and distances
கோணங்கள் மற்றும் தூரங்கள்

(B) Bearing and angles
பேரிங் மற்றும் கோணங்கள்

(C) Bearing and distances
பேரிங் மற்றும் தூரங்கள்

(D) Angles only
கோணங்கள் மட்டும்

17. The process of Demarcation and Planting of Stone is called
புல எல்லைகள் நிர்ணயம் செய்து கற்கள் நடும் பணி எவ்வாறு அழைக்கப்படுகிறது

(A) D Work
D பணி

(B) E Work
E பணி

(C) F Work
F பணி

(D) C Work
C பணி

18. Village maps are generally plotted to the scale
கிராம வரைபடம் ——————— அளவுகளில் வரையப்படுகிறது

(A) 1:1000

(B) 1:5000

(C) 1:500

(D) 1:2000

19. The G.T.Station are marked by small deep ___________ with plument hole drilled in the centre
தேசிய முக்கோண நிலையங்கள் (G.T.Station) ——————— வடிவில் குறியிடப்பட்டு நடுவில் குழியுடன் அடையாளமிடப்பட்டுள்ளன.

(A) Square
சதுரம்

(B) Rectangle
செவ்வகம்

(C) Circle
வட்டம்

(D) Traingle
முக்கோணம்

20. The length of a rectangle is double while its breadth is halved. What is the percentage change in area?
ஒரு செவ்வகத்தின் நீளம் இரு மடங்காகவும், அகலம் பாதியாகவும் குறையும் பட்சத்தில், அதன் பரப்பில் எவ்வளவு சதவீதம் மாறுபாடு ஏற்படும்

(A) 50
50

(B) 75
75

(C) 100
100

(D) No change
மாறுதல் இல்லை

21. The difference between the Traverse Area and Field Area should not exceeds
ஒரு கிராமத்தின் டிராவர்ஸ் பரப்பு மற்றும் புலவாரி பரப்புகளுக்கும் உள்ள வேறுபாடுகளுக்கு வரையறுக்கப்பட்ட சதவீதம் என்ன?

(A) 1%

(B) 2%

(C) 5%

(D) 4%

22. The Stone Demarcation and Registry work done by the surveyor will be inspected ________ by the range Sub inspector of surveyor
நில அளவர் பதிவு செய்த மற்றும் சரிபார்த்த கற்களில் ________ சதவீதம் சரக சார் ஆய்வாளர் ஆய்வு செய்ய வேண்டும்

(A) 100%

(B) 60%

(C) 40%

(D) 20%

23. Notification under Section 6(1) of the Survey and Boundaries will be notified in
6(1) விளம்பரம் ________ அரசிதழில் வெளியிடப்படுகிறது

(A) District Gazette
மாவட்ட அரசிதழ்

(B) Tamilnadu Gazette
தமிழ்நாடு அரசிதழ்

(C) Taluk Gazette
வட்ட அரசிதழ்

(D) Annual Gazette
ஆண்டு அரசிதழ்

24. The street survey field should be formed as approximately ________ length size
தெரு நில அளவை புலம் தோராயமாக ________ மீட்டர் நீளம் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்

(A) 20 Metres
20 மீட்டர்

(B) 30 Metres
30 மீட்டர்

(C) 100 Metres
100 மீட்டர்

(D) 120 Metres
120 மீட்டர்

25. GTS means

GTS என்பதன் விரிவாக்கம் ————————

(A) Great Trignometric Station

(B) Government Technical Survey

(C) Government Town Surveyor

(D) Government Triangulation Survey

26. In field inspection work, percentage of inspection covered by Inspector of Survey is

நில அளவை ஆய்வாளர் புலத்தணிக்கையில் ———————— சதவீதம் மொத்த பணியில் ஆய்வு செய்ய வேண்டும்

(A) 100%

(B) 60%

(C) 40%

(D) 25%

27. The commencement of Survey will be notified under ___________ of Survey and Boundary act

நில அளவை செய்யப்போவதை தெரிவிக்கும் நில அளவை மற்றும் எல்லை சட்டப்பிரிவு

(A) Section 5
பிரிவு 5

(B) Section 6
பிரிவு 6

(C) Section 9
பிரிவு 9

(D) Section 13
பிரிவு 13

28. In a closed traverse of 'N' sides the sum of internal angles should be

மூடிய டிராவர்ஸ் பக்கங்கள் N எனில் உட்கோணங்களின் கூடுதல் ———————— ஆகும்

(A) $2n \times 90$ degree
$2n \times 90$ டிகிரி

(B) $(2n+4) \times 90$ degree
$(2n+4) \times 90$ டிகிரி

(C) $(2n-4) \times 90$ degree
$(2n-4) \times 90$ டிகிரி

(D) $n \times 90$ degree
$n \times 90$ டிகிரி

29. 1 Links = ___________ Centimetre

1 லிங்க்ஸ் என்பது ———————— சென்டி மீட்டர்

(A) 25

(B) 30

(C) 20

(D) 10

30. Parallax + Refraction reflects to
Parallax + Refraction மொத்த மதிப்பு

(A) 180°
(B) 360°
(C) 270°
(D) 90°

31. 24 Hours = __________ seconds
24 மணி நேரம் என்பது எத்தனை வினாடிகளை உள்ளடக்கியது?

(A) 86400
(B) 84600
(C) 84800
(D) 88400

32. ETS Means
ETS என்பதன் விரிவாக்கம்

(A) Electronic Total Station
(B) Electromagnetic Total Station
(C) Electrical Total Station
(D) Eqilateral Total Station

33. What is the admissible tolerance between the Registered area and Actual area
பதிவு செய்யப்பட்ட விஸ்தீர்ணத்திற்கும், உண்மையான விஸ்தீர்ணத்திற்கும் இடையில் எத்தனை சதவீதம் வேறுபாடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(A) Below 10%
(B) Below 15%
(C) Below 5%
(D) Below 25%

34. In Cadastral Survey – measurement of B class stone are
கடாஸ்டல் சர்வேயில் "ஆ" கல்லின் அளவு ________ ஆகும்.

(A) 45 cm × 20 cm × 20 cm
45 செ.மீ × 20 செ.மீ × 20 செ.மீ
(B) 60 cm × 15 cm × 15 cm
60 செ.மீ × 15 செ.மீ × 15 செ.மீ
(C) 90 cm × 22.5 cm × 22.5 cm
90 செ.மீ × 22.5 செ.மீ × 22.5 செ.மீ
(D) 30 cm × 15 cm × 15 cm
30 செ.மீ × 15 செ.மீ × 15 செ.மீ

35. Uses of Tie Line in
டைலைன் _________ ல் பயன்படுகிறது.

(A) C.S.M (B)
சி.எஸ்.எம்.பி

(B) 90 × 22.5 × 22.5
90 × 22.5 × 22.5

(C) Town Survey
நகரளவை

(D) WGS 84
WGS 84

36. By using how many years tidal information was the mean sea level of T.N. derived?
தமிழ்நாட்டின் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை கடற்பகுதியில் கடல் அலை எழுச்சி மற்றும் தாழ்ச்சி (high and low tide line) அளவிடப்படுகிறது.

(A) 5 years
5 ஆண்டுகள்

(B) 10 years
10 ஆண்டுகள்

(C) 15 years
15 ஆண்டுகள்

(D) 19 years
19 ஆண்டுகள்

37. Which symbol denoted at the top of the stones planted in the Government Poramboke lands?
அரசு புறம்போக்கு உட்பிரிவு வளைவுகளில் நடப்படும் கற்களில் காணப்படும் அடையாளக்குறி?

(A) S

(B) +

(C) ↑

(D) △

38. In the following which is not prepared for street survey field
தெரு எல்லை புலங்களுக்கு _________ கணிப்பதில்லை

(A) Off-Set
ஆப்செட்

(B) F-line
F-லைன்

(C) Area
பரப்பு

(D) G–line
G–லைன்

39. In bearing calculation if the sum of the angle exceeds than 540° deduct ———— to get the bearing

துருவகோணம் கணக்கிடும் போது கோணங்களின் கூடுதல் 540° க்கு மேம்பட்டால் எந்த கோண அளவை கழிக்க வேண்டும்

(A) 180°
(B) 90°
(C) 540°
(D) 360°

40. In Town Survey Tie line is taken to find out ———— stones

டை லைன் அளவுகள் எந்த வகை கற்களை கண்டுபிடிக்க உதவுகிறது.

(A) A stones
A கற்கள்
(B) B stones
B கற்கள்
(C) Chain survey stones
சங்கிலி அளவை கற்கள்
(D) Theodolite Stones
தியோடலைட் கற்கள்

41. Taluk Account No.5 Register also called as

வட்ட கணக்கு எண் 5 என்பது

(A) Relinquishment Register
உரிமை துறத்தல் பதிவேடு
(B) Darksast register
தர்காஸ்து பதிவேடு
(C) Registry of Transfer register
உரிமை மாற்றம் பதிவேடு
(D) Classification changes Register
வகைபாடு மாற்றம் பதிவேடு

42. In the Initial Survey, Area Calculation of the village map known as

முதன்மை நில அளவை பணியில் பரப்பு கணித்தல் பணி என்பது

(A) H Work
H பணி
(B) G Work
G பணி
(C) F Work
F பணி
(D) C Work
C பணி

43. __________ is an imaginary point directly above a particular location on the imaginary Celestial Sphere
கணிப்பவர் நிலைக்கு நேர் மேலே வான் இயல் கோளத்தில் உள்ள புள்ளிக்கு

(A) Meridian
மெரிடியன்

(B) Zenith point
வானுச்ச புள்ளி

(C) Celestial Point
வானியல் புள்ளி

(D) The Horizan
வான விளிம்பு

44. Forest Coiran means
காட்டுத்தூண் என்பது

(A) Village Triangle Stone
கிராமமுச்சந்தி கற்கள்

(B) Forest Boundary Stone
வனத்துறை எல்லைகற்கள் நடுவது

(C) Agriculture Department Stone
வேளாண்மைத் துறையால் கற்கள் நடுவது

(D) Highway Department Stone
நெடுஞ்சாலைத் துறையால் கற்கள் நடுவது

45. If $d = 84$ m, find out the Circumference of a circle?
வட்டத்தின் விட்டம் 84 மீ எனில் வட்டத்தின் சுற்றளவு என்ன?

(A) 284 sq.m
284 ச.மீ

(B) 254 sq.m
254 ச.மீ

(C) 274 sq.m
274 ச.மீ

(D) 264 sq.m
264 ச.மீ

46. 1000 mm = __________ Meter
1000 மி.மீ = __________ மீட்டர்

(A) 100

(B) 10

(C) 1

(D) 1.5

47. The 4 angles of a rectangular is
ஒரு செவ்வகத்தின் 4 கோணங்கள்

(A) Equal
சமம்

(B) Different
மாறுபாடானது

(C) Two angles are equal
2 கோணங்கள் மட்டும் சமம்

(D) Opposite side angles are equal
எதிரெதிர் கோணங்கள் சமம்

48. Formula to find out the area of a Rhombus
நாற்கரத்தின் பரப்பளவு காண சூத்திரம்

(A) $d(h1+h2)$

(B) $1/2\ d(h1+h2)$

(C) $1/2\ d*h(h1+h2)$

(D) $1/2\ b*1(h1+h2)$

49. The hole placed at the top of the A class stone is called
A கற்களின் தலைப்பகுதியில் இடப்படும் துவாரத்திற்கு என்ன பெயர்?

(A) Tar Mark
தார் குறி

(B) Rock Mark
பாறைக் குறி

(C) Plummet Hole
பிளம்மெட் துவாரம்

(D) Top hole
மேல் துவாரம்

50. The land tax is calculated for each lands based on
நிலத்திற்கு தீர்வை எதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது

(A) Area of the land
நிலப் பரப்பு

(B) Land Value
நில மதிப்பு

(C) Cultivation of the Plants
பயிர் சாகுபடி

(D) Based on the Water Source
நீர் பாசன அடிப்படையில்

51. The formation of many sub circuit boundary inside the main circuit is called
பெருஞ்சுற்று எல்லைக்குள் பல உபசுற்று (Sub circuit) எல்லைகள் பிரித்து அமைப்பதற்கு என்ன பெயர்?

(A) Khandam
கண்டம்

(B) Minor Circuit
சிறுசுற்று புலம்

(C) Field Formation
புலம் அமைத்தல்

(D) Long Narrow Field
நீண்ட குறுகிய புலம்

52. Which register is prepared by the Settlement?
நிலவரித்திட்ட துறையால் எந்த ஆவணம் தயாரிக்கப்படுகிறது?

(A) Chitta
சிட்டா

(B) Adangal
அடங்கல்

(C) A Register
அ பதிவேடு

(D) FMB
புலப்பட புத்தகம்

53. sin $A$ =
sin $A$ =

(A) Opposite side/Hypotenous
எதிர்ப்பக்கம்/கர்ணம்

(B) Hypotenous/Opposite side
கர்ணம்/எதிர்ப்பக்கம்

(C) Base/Hypotenous
அடிப்பக்கம்/கர்ணம்

(D) Base/Opposite side
அடிப்பக்கம்/எதிர்ப்பக்கம்

54. The account No. 1 register maintained by the VAO is also known as
கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் கணக்கு எண் 1 என்ற பதிவேடு எது?

(A) Chitta
சிட்டா

(B) Village A register
கிராம அ பதிவேடு

(C) Adangal
அடங்கல்

(D) Stone Register
கல் பதிவேடு

55. In town survey, the block map prepared without details is called as
நகர அளவையில் விளக்கிகள் இல்லாமல் வரையப்படும் பிளாக் வரைபங்ளுக்கு என்ன பெயர்?

(A) Index map
இன்டக்ஸ் வரைபடம்

(B) Fair block map
பேர் பிளாக் வரைபடம்

(C) Rough block map
ரப் பிளாக் வரைபடம்

(D) Demarcation map
டிமார்கேஷன் வரைபடம்

56. The combined map consist of street field is called as
தெரு புலங்களை உள்ளடக்கி தயார் செய்யப்படும் கூட்டு வரைபடத்திற்கு என்ன பெயர்?

(A) Index map
இன்டக்ஸ் வரைபடம்

(B) Composite map
காம்போசைட் வரைபடம்

(C) Street map
தெரு வரைபடம்

(D) Demarcation map
டிமார்கேஷன் வரைபடம்

57. Area Calculation and Area Adjusted
பரப்பு கணித்தல் மற்றும் சரிகட்டுதல்

(A) Actual Area × Registered Area/Total Actual Area
உண்மையான பரப்பு × பதிவு செய்யப்பட்ட பரப்பு / மொத்த உண்மையான பரப்பு

(B) Registered Area + Total Actual Area/ Actual Area
பதிவு செய்யப்பட்ட பரப்பு + மொத்த உண்மையான பரப்பு / உண்மையான பரப்பு

(C) Registered Area–Actual Area × Total Actual Area
பதிவு செய்யப்பட்ட பரப்பு – உண்மையான பரப்பு × மொத்த உண்மையான பரப்பு

(D) Actual Area–Registered Area /Total Actual Area
உண்மையான பரப்பு – பதிவு செய்யப்பட்ட பரப்பு / மொத்த உண்மையான பரப்பு

58. Formula for the area of a circle
வட்டத்தின் பரப்பு காண சூத்திரம்

(A) $2\pi r$
(B) $1/2bh$
(C) $\pi r^2$
(D) $1/2\ b(h1 + h2)$

59. Addition of all angles comprised inside a triangle is
முக்கோணத்தின் எல்லா பக்க கோணங்களின் கூட்டுத்தொகை ———————— ஆகும்.

(A) 90°
(B) 360°
(C) 180°
(D) 270°

60. The book used on recording all field measurements are known as
புலத்தில் கிரகிக்கப்படும் அளவுகளை பதிய பயன்படும் புத்தகம்

(A) Field Book
புலப்புத்தகம்

(B) Offset book
குத்தளவு புத்தகம்

(C) Traverse Sheet
டிராவர்ஸ் தாள்

(D) Azimuth
அசிமத்

61. The topographical Survey operations will be done by
ஸ்தலநில அளவைப் பணிகள் எந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்

(A) Tamilnadu Survey Dept
தமிழ்நாடு நில அளவைத் துறை

(B) Survey of India
இந்திய நில அளவை நிறுவனம்

(C) Archaeology Dept
தொல்பொருளியல் துறை

(D) Geological Survey of India
புவியியல் நிலஅளவை துறை

62. In case of long narrow fields , No triangulaton is formed the reason is
நீண்ட குறுகிய புலம் அமைக்கும் போது ஏன் மூலைவிட்ட முக்கோண முறையை பயன்படுத்துவதில்லை?

(A) It is a Labourious Process
கடினமான பணி

(B) Unable to measure
அளவு செய்ய இயலாது

(C) While plotting cannot got the true shape of the field
வரையும்போது புலத்தின் சரியான உருவம் கிடைக்காது

(D) Unable to calculate the Area
பரப்பு கணிக்க இயலாது

63. For Accurate plotting ———— should be formed
துல்லியமான வரைபடம் வரைவு செய்ய எது தேவைப்படுகிறது?

(A) Ill triangle
ஒழுங்கற்ற முக்கோணம்

(B) Rightangle Triangle
செங்கோண முக்கோணம்

(C) Equilateral Triangle
சமபக்க முக்கோணம்

(D) Large and well conditioned triangle
பெரிய மற்றும் ஒழுங்கான முக்கோணம்

64. Details should be Recorded, by taking offset from
விளக்கிகள் பதிய குத்தளவு எதிலிருந்து எடுக்க வேண்டும்?

(A) Any one of the G-line
ஏதாவது ஒரு G-லைனிலிருந்து

(B) Any one of F-line
ஏதாவது ஒரு புல எல்லையிலிருந்து

(C) Nearest G-line
பக்கத்து G-லைனிலிருந்து

(D) Nearest Stone
பக்கத்து கற்களிலிருந்து

65. According to G.O.210 who should be ensure the Proper action against the Petition received for the Subdivision of a land as well as responsible for the delay action
அரசாணை எண் 210ன் படி உட்பிரிவு கோரி பெறப்படும் மனுக்கள் முறையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என கண்காணிக்கவும், தாமதத்திற்கு பொறுப்பு என யாரை குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Firka Surveyor
உள்வட்ட அளவர்

(B) Head Surveyor
தலைமை அளவர்

(C) Taluk Deputy Surveyor
வட்ட சார் ஆய்வாளர்

(D) Tahsildar
வட்டாட்சியர்

66. Presently FMS Sketches drawn in
தற்போது புலப்படங்களை வரைவு செய்யும் அளவு முறை

(A) Feet System
அடி முறை

(B) Metric System
மெட்ரிக் முறை

(C) Links System
லிங்ஸ் முறை

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

67. In Tamilnadu, Systematic Land Administration made in
தமிழ்நாட்டில் —————— ஆட்சிக்காலத்தில் நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான நிலநிர்வாகம் காணப்பட்டது.

(A) Chola Period
சோழர் காலம்

(B) Pallava Period
பல்லவர் காலம்

(C) Cherar Period
சேரர் காலம்

(D) Nayakar Period
நாயக்கர் காலம்

68. ———————— is the half of an imaginary great circle of the earth's surface terminated by the North pole and the South pole connecting points of equal longitude
துருவங்கள் வழியாக பூமியை சுற்றிச் செல்வதாக வரையப்பட்ட கற்பனைக் கோட்டிற்கு ———————— என்று பெயர்.

(A) The Horizan
வான விளிம்பு

(B) Meridian
மெரிடியன்

(C) Zenith point
வானுச்சப்புள்ளி

(D) Celestial sphere
வானியன் கோளம்

69. How many years F-line Closure files preserved in Record room
புல எல்லையை சுட்டிகாட்ட கோரும் கோப்புகள் எத்தனை ஆண்டுகளுக்கு பதிவறையில் பாதுகாக்கப்படுகிறது.

(A) 10 years
பத்தாண்டுகள்

(B) 3 years
மூன்றாண்டுகள்

(C) 1 year
ஓராண்டு

(D) 5 years
ஐந்தாண்டுகள்

70. The following main Survey process will be done in field
புலத்தில் மேற்கொள்ளப்படும் முதன்மை நில அளவைப் பணிகள்

(A) C&D and S&B

(B) G&H and C&D

(C) A&B and E&F

(D) S&B and I&J

71. A conspicuous object of a permanent character in a field such as temple, house is called
புலத்தின் மேற்பரப்பில் தெளிவாக தெரியக்கூடிய கோவில், வீடு போன்றவை நில அளவை ஆவணங்களில் எவ்வாறு அழைக்கப்படுகின்றன.

(A) Ladder
ஏணி

(B) Records
ஆவணங்கள்

(C) Details
விளக்கிகள்

(D) Sketch
வரைபடம்

72. Diagonal of a circle is
ஒரு வட்டத்தின் விட்டம் என்பது

(A) 2 * Radius
ஆரத்தின் இரு மடங்கு

(B) Equal to Radius
ஆரத்தின் சமமாக

(C) 3 * Radius
ஆரத்தின் மூன்று மடங்கு

(D) ½ * Radius
ஆரத்தின் அரை மடங்கு

73. Select the system presently followed for formation of Survey fields in Tamilnadu
தமிழ்நாட்டில் தற்சமயம் சர்வே புலங்கள் அமைக்கப்படும் முறை

(A) Block map System
பிளாக் மேப் முறை

(B) Plantable System
பிளேன்டேபிள் முறை

(C) Simple Triangulation Method
சாதாரண முக்கோண முறை

(D) Diagonal and Offset System
மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறை

74. Before starting survey————is prepared and marked
நில அளவை செய்வதற்கு முன்பாக ———— தயாரித்து குறியிட வேண்டும்.

(A) Index Map
குறியீட்டு வரைபடம்

(B) Location Map
இடம்காணும் வரைபடம்

(C) Town Map
நகர வரைபடம்

(D) Topographical Map
டோபோகிராபிகல் வரைபடம்

75. Jamabandhi check in Taluk Office will conducted once in a
வருவாய் நிர்வாக தீர்வாயம் வட்ட அலுவலகத்தில் ஒவ்வொரு ———— நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(A) Six month
6 மாதம்

(B) Fazli year
பசலி ஆண்டு

(C) Academic
கல்வியாண்டு

(D) Financial year
நிதியாண்டு

76. Sub-Divisions in each Survey Field should be numbered consecutively commencing from————Corner of the field.
ஒரு புலத்தில் உட்பிரிவுகளுக்கு உட்பிரிவு எண்கள் ———— மூலையிலிருந்து கொடுக்கப்படும்.

(A) North West
வடமேற்கு

(B) North East
வடகிழக்கு

(C) South West
தென்மேற்கு

(D) South East
தென்கிழக்கு

77. The village Admintrative officer should enter the word————if the stone cannot be found during inspection.
ஒரு கிராம நிர்வாக அலுவலர் கல் தணிக்கை மேற்கொள்ளும் போது கல் இல்லாமல் இருந்தால் அதனை ———————— என பதிவு செய்வார்.

(A) Fallen
கீழே விழுந்தது

(B) Out of position
இடம் மாறியது

(C) Missing
காணாமல் போனது

(D) Cannot be traced
கண்டுபிடிக்க முடியாதது

78. In a Triangle ABC, if $a = 90°$, $b = 52°$ then c = ?
ABC என்ற முக்கோணத்தில் $a = 90°$, $b = 52°$ எனில் $c$ யின் கோணம் என்ன?

(A) 48°

(B) 58°

(C) 38°

(D) 42°

79. In a Right Angle Triangle, the base is 5 meters and Hypotenuse is 13 meters. Find out the Area
ஒரு செங்கோண முக்கோணத்தில் அடிப்பக்கம் 5 மீ, கர்ணம் 13 மீ எனில், அதன் பரப்பு என்ன?

(A) 24 sq. m
24 ச.மீ.

(B) 34 sq. m
34 ச.மீ.

(C) 30 sq. m
30 ச.மீ.

(D) 25 sq. m
25 ச.மீ.

80. Angle for a straight line is
ஒரு நேர் கோட்டை வரைந்தால் உண்டாகும் கோணம்

(A) 90°
90°

(B) 180°
180°

(C) 360°
360°



(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

81. The length and breadth of a play ground are 36 m and 21 m respectively. Flagstaffs are required to be fixed on all along the boundary at a distance of 3 m apart. The number of flagstaffs will be
ஒரு விளையாட்டு மைதானத்தின் நீளம், அகலம் முறையே 36 மீ மற்றும் 21 மீ. மைதானத்தை சுற்றி 3 மீ இடைவெளியில் கொடிக்கம்பம் நடப்பட்டால் எத்தனை கொடிக்கம்பம் நட வேண்டும்?

(A) 38 (B) 48
(C) 50 (D) 37

82. In a square ABCD, the length of diagonal AC = 18.2 m. Calculate the Area
ABCD என்ற சதுரத்தில், மூலைவிட்ட அளவு AC = 18.2 மீ எனில் சதுரத்தின் பரப்பு

(A) 80.41 sq.m (B) 80.81 sq.m
(C) 82.41 sq.m (D) 82.81 sq.m

83.  Area of the Triangle 840 sq.m, base = 40 m. Find out the height?
 முக்கோணத்தின் பரப்பு 840 ச.மீ. அடிப்பக்கம் 40 மீ எனில் அதன் உயரம் என்ன?

(A) 42 m (B) 24 m
(C) 38 m (D) 44 m

84. The square root of 0.04 is
0.04 என்பதன் வர்க்கமூலம்

(A) .02 (B) .2
(C) .002 (D) .0002

85. The methods used in modern survey ———— system and in the manual survey earlier, Everest Ellipsoid, are basically different
———— மூலம் நில அளவை செய்வது பழைய நிலஅளவை, எவரெஸ்ட் எலிப்சாய்டு ஆகிய அளவையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது.

(A) WGS–56 (B) WGS–64
(C) WGS–68 (D) WGS–84

86. Find the perimeter of a triangle with sides equal to 16m, 24m, 15m
16 மீ, 24 மீ, 15 மீ பக்க அளவுடைய முக்கோணத்தின் சுற்றளவு என்ன?

(A) 55 m
55 மீ

(B) 50 m
50 மீ

(C) 60 m
60 மீ

(D) 25 m
25 மீ

87. When was the Updating Registry Scheme started
நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(A) 1980

(B) 1984

(C) 1979

(D) 1982

88. 1 Cent is————Sq.Feet
1 செண்ட் என்பது ———— சதுர அடி

(A) 436.5

(B) 435.5

(C) 345.6

(D) 346.5

89. Choose the correct :

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Open Block<br>திறந்தவெளி பகுதி | 1. | 4 Hectare<br>4 ஹெக்டேர் |
| (b) | Medium Block<br>சுமாரான பகுதி | 2. | 64 Hectare<br>64 ஹெக்டேர் |
| (c) | Closed Block<br>நெருக்கமான பகுதி | 3. | 16 Hectare<br>16 ஹெக்டேர் |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 3 |
| (D) | 3 | 2 | 1 |

90. Poramboke land refers to————lands
புறம்போக்கு நிலம் என்பது

(A) Wet
நஞ்சை

(B) Dry
புஞ்சை

(C) Government
அரசு

(D) Ryotwari
ரயத்துவாரி

91. The town survey register in form no. 4 deals with
நகர அளவை பதிவேடு எண் 4 எதனுடன் தொடர்புடையது

(A) Acquisition
நில எடுப்பு

(B) Encroachment
ஆக்கிரமிப்பு

(C) Sub divisions
உட்பிரிவு

(D) Patta land
பட்டா நிலம்

92. The————————is used to plotting offset on F –Line
தாளில் வரைவு செய்யும் போது, புல எல்லையில் குத்தளவு வரைவு செய்ய எது பயன்படுகிறது

(A) Plotting Scale
வரைவு அளவுகோல்

(B) Bit Scale
துண்டு அளவுகோல்

(C) Compass
காம்பஸ்

(D) Verni
வெர்னியர் அளவுகோல்

93. The ———— should be notified under section 13 of the survey and boundary act.
தமிழ்நாடு நிலஅளவை எல்லைச் சட்டம் பிரிவு 13–ல் கீழ்கண்டவற்றில் எது குறித்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது

(A) Initial stage of survey
முதன்மை நிலஅளவை

(B) Re-survey
மறு நிலஅளவை

(C) Completion of any survey
நிலஅளவை நிறைவு பெற்றது

(D) Supplemental survey
துணை நிலஅளவை

94. What is the time limit to file the Appeal Petition against the 9(2) Notice
நில அளவை பட்டாதாரர்களுக்கு, 9(2) நோட்டீஸ் சார்வு செய்த பின் குறைகள் இருந்தால் ———— காலத்திற்குள் மேல்முறையீடு செய்து கொள்ள வேண்டும்

(A) 15 days
15 நாட்கள்

(B) 30 days
30 நாட்கள்

(C) 6 months
6 மாதம்

(D) 3 months
3 மாதம்

95. Taluk Account No. 4 Register also called as
வட்ட கணக்கு எண். 4 என்பது

(A) Relinquishment Register
உரிமை துறத்தல் பதிவேடு

(B) Darksast register
தர்காஸ்து பதிவேடு

(C) Registry of Transfer register
உரிமை மாற்றம் பதிவேடு

(D) Classification changes Register
வகைபாடு மாற்றம் பதிவேடு

96. Tan A =
Tan A =

(A) Opposite / Adjacent
எதிர்ப்பக்கம் / அடுத்துள்ள பக்கம்

(B) Hypotenous / Opposite
கர்ணம் / எதிர்ப்பக்கம்

(C) Adjacent / Hypotenous
அடுத்துள்ள பக்கம்/கர்ணம்

(D) Base / Opposite
அடிப்பக்கம் / எதிர்ப்பக்கம்

97. A Compass is used to find ———— Direction
திசைகாட்டியின் மூலம் ———— கண்டறியப்படும்

(A) Magnetic north – south
காந்த வடக்கு தெற்கு

(B) South
தெற்கு

(C) East–West
கிழக்கு – மேற்கு

(D) West–East
மேற்கு – கிழக்கு

98. ———— will be used for calculating area in FMB.
புலப்படத்தில் பரப்பு கணிக்க ———— பயன்படுத்தப்படுகிறது

(A) Area Square sheets
ஏரியா ஸ்கொயர் தாள்

(B) Ruled sheets
ரூல்டு தாள்

(C) Rectangle sheets
செவ்வகத்தாள்

(D) Unruled sheets
அன்ரூல்டு தாள்

99. The selling price of survey stone should be fixed and published in
நில அளவை கற்களுக்கான விற்பனை தொகை நிர்ணயம் செய்து ———— ல் வெளியிடப்படுகிறது

(A) Tamilnadu Gazette
தமிழ்நாடு அரசிதழ்

(B) The District Gazette
மாவட்ட அரசிதழ்

(C) News Paper
செய்திதாள்

(D) Villages Chavadi
கிராம சாவடி

100. Unit used in GPS is
GPS ல் உபயோகப்படுத்தப்படும் அளவு முறை ———— உள்ளது

(A) Rectangle
செவ்வகம்

(B) Circle
வட்டம்

(C) Meter
மீட்டரில்

(D) Degree
கோணம்